# நிலைபெறுதகு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சிநிரல் பற்றிய கலந்துரையாடல்

**திகதி :** 2017-07-14



நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழுவின் தவிசாளர் அக்குழுவின் இடைக்கால அறிக்கையை சமர்ப்பிப்பது தொடர்பாக 2017 ஜூலை 13 ஆம் திகதியன்று பாராளுமன்ற கட்டிடத்தொகுதியில் கலந்துரையாடலொன்றை நடத்தினார். இதில் குழு அலுவலக செயலாளர்களுடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட (UNDP) பிரதிநிதிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவக (SLIDA) பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.